# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

## சட்டமாணிப் பரீட்சை, ஆண்டு I, 2022

## இலங்கையின் சட்ட முறைமை

(மூன்று மணித்தியாலம்)

**வினாக்களின் மொத்த எண்ணிக்கை : 06**

**மூன்று (03) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்)

---

01. "இலங்கையின் பொதுச் சட்டம் உரோம டச்சுச் சட்டம் எனும் வாதம் காலம் தொட்டு பரீட்சிக்கப்பட்டதொன்றாகும். எவ்வாறாயினும், உரோம டச்சு சட்டம் தொடர்பில் ஆரம்பகால பிரித்தானிய நீதிமன்றங்கள் கொண்டிருந்த மட்டுப்பாடான மற்றும் அனுதாபமற்ற அணுகுமுறையினால் அதன் பயணம் கடினமாகி இருந்து வந்தது. இதன் விளைவாக, ஒருபுறம் நவீன காலத்தில் உரோம டச்சுச் சட்டம் எந்த அளவிற்கு பிரயோகமாகின்றது என்பதனையும் மறுபுறம் எப்போது உரோம டச்சுச் சட்டத்திலிருந்து நீதிமன்றங்கள் விலகலாம் என்பதனையும் தீர்மானிக்க நீதிமன்றங்கள் பல்வேறுப்பட்ட பரீட்சைகளைப் பின்பற்றியுள்ளன."

மேற்கூறப்பட்ட கூற்றை வழகற்றுப்போதல் கோட்பாட்டின் நீதிமுறைப் பிரயோகம் மற்றும் " உடைக்கப்படாத மற்றும் வெளிப்படையான தீர்மானங்களின் தொடர்" எனும் அணுகுமுறை மற்றும், உரோம டச்சுச் சட்டத்தின் நவீன பிரயோகம் தொடர்பிலான அதன் தாற்பரியங்கள் என்பவற்றுடன் தொடர்புறுத்தி ஆராய்க. உமது விடையை பொருத்தமான தீர்ப்புச் சட்டம் மற்றும் நியதிச்சட்ட ஏற்பாடுகளைக் கொண்டு ஆதாரப்படுத்துக.

**(100 புள்ளிகள்)**

02. (அ) மற்றும் (ஆ) ஆகிய **இரண்டிற்கும்** விடை தருக.

(அ). கண்டியச் சட்டம் இனியும் ஒரு இடம்சார் சட்டமல்ல"

நீர் உடன்படுகிறீரா? சட்ட அதிகாரங்களின் பின்னணியில் மேலுள்ள மேற்கோளுடன் விசேடமாகத் தொடர்புறுத்தி ஒரு சிறு குறிப்பு எழுதுக.

(ஆ). நிகார என்பவள் சுனில் என்பவனுடன் வலிதான திருமணமொன்றினைச் செய்தாள். அவளது திருமணம் கண்டிய சட்டத்தின் கீழ் முறையாக பதியப்பட்டதுடன் *தீக* திருமணமொன்றாக கருதப்பட்டது. எவ்வாறாயினும், அவளது திருமணத்தின் ஒரு சில நாட்களின் பின், நிகார கடுமையாக நோய்வாய்ப்பட்ட தனது தந்தைக்கு உதவுவதற்காக சுனிலுடன் அவளது தந்தையின் வீட்டிற்கு மீளத்திரும்பியதுடன் அவள் சுனிலின் இடத்திற்கு ஒருபோதும் மீளச்செல்லவில்லை. நிகாராவின் தந்தையின் இறப்பின் பின், அவள் தனது தந்தையின் இடத்திற்கு மீளத்திரும்பிய நாளிலிருந்து அவளது திருமணம் பின்ன திருமணமாக மாற்றமடைந்தமையினால் தனது தந்தையின் ஆதனம் மீதான உரிமையை தான் தக்க வைத்ததுக்கொண்டுள்ளாள் என நிகார கோருகிறாள்.

நிகாரவிற்கு ஆலோசனை வழங்குக. உமது விடையை பொருத்தமான சட்ட அதிகாரங்களைக் கொண்டு ஆதாரப்படுத்துக.

**(50x 2= 100 புள்ளிகள்)**

03. "இங்கிலாந்தில் ஒரு குறித்த திகதியில் நிலவுகையிலிருந்த சட்டத்தை ஏற்றுக்கொள்ளலே பிரித்தானிய காலனித்துவ நாடுகளுக்கு ஆங்கில சட்டத்தை விஸ்தரிப்பதற்கு பின்பற்றப்பட்ட பொதுவான நடைமுறையாக இருந்தது. சில சந்தரப்பங்களில், இது பல்வேறுப்பட்ட வழக்காற்றுச் சட்டங்களின் வரையறுக்கப்பட்ட பிரயோகத்திற்கு உட்பட்டதாக அமைந்தது."

*-Kenneth Roberts Wray, Commonwealth and Colonial Law (1966), pp. 529-557*

மேற்கூறப்பட்ட கூற்று இலங்கையின் பின்னணிக்கு பொருத்தமானது என நீர் கருதுகிறீரா?

இலங்கையில் ஆங்கில சட்டத்தை நிறுவுவதற்காக பிரித்தானிய ஆட்சியாளர்கள் பின்பற்றிய நடைமுறைகள் மற்றும் நடபடிமுறைகளை விபரிக்குக. உமது விடையை பொருத்தமான சட்ட அதிகாரங்களைக் கொண்டு ஆதாரப்படுத்துக.

**(100 புள்ளிகள்)**

04. சுதாகர் என்பவன் 1995 ஆம் ஆண்டு நுவரெலியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு 'யாழ்ப்பாண இந்து கல்லூரியின்' அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டான். அவன் இடமாற்றம் பெற்ற ஐந்து வருடங்களின் பின் நிரந்தரமாகவே அங்கு குடியமர்ந்ததோடு அவனது மகன் பாலச்சந்திரன் யாழ்ப்பாணம் காரைநகரில் பிறந்தான். சுதாகரின் பெற்றோர் ஆரம்பத்தில் இந்தியா தமிழ்நாட்டிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு குடிபெயர்ந்ததோடு பின்னர் நுவரெலியாவில் வியாபாரம் செய்தனர். சுதாகர் 1960 ஆம் ஆண்டு நுவரெலியாவில் அவனது பெற்றோர் அவர்களது வியாபார நோக்கத்திற்காக தங்கியிருந்த காலத்தில் பிறந்தான். பாலச்சந்திரன் யாழ்ப்பாணத்தில் வளர்ந்து படித்து கொழும்பு பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவத்தில் இளங்கலைப் பட்டம் பெற்றான். பல்கலைக்கழகக் கல்வி காலத்தில் பாலச்சந்திரனின் வசதிக்காக அவனது பெற்றோர் வாங்கி கொடையளித்த வெள்ளவத்தையில் அமையப்பெற்றிருந்த அடுக்குமாடி குடியிருப்பில் அவன் தங்கியிருந்தான். அவன் தெஹிவலையை சேர்ந்த சிங்கள பெண்ணான சுனிலா என்பவளுடன் உறவொன்றை ஆரம்பித்தான். அவன் சுனிலாவை திருமணம் செய்ய எண்ணியிருப்பதோடு அவள் இந்து மதத்தை தழுவ ஒப்புக்கொள்கிறாள். பாலச்சந்திரன் சுனிலாவுடன் யாழ்ப்பாணம் காரைநகரில் தனது நிரந்தர வதிவிடத்தை அமைத்துக்கொள்ள விரும்புவதோடு வெள்ளவத்தையிலுள்ள அடுக்குமாடி குடியிருப்பை விற்பனை செய்யவும் எண்ணுகிறான். பாலச்சந்திரன் மற்றும் சுனிலா ஆகியோர் அவர்கள் தேசவழமையால் ஆளப்படுவார்களா என்பதை அறிய உமது ஆலோசனையை நாடுகின்றனர்.

பாலச்சந்திரன் மற்றும் சுனிலா ஆகியோருக்கு பின்வரும் விடயங்கள் தொடர்பில் ஆலோசனை வழங்குக.

(அ) அவர்களின் திருமணம் மற்றும் அடுத்துரிமை (succession) தொடர்பில் ஆள்சார் சட்டமாக தேசவழமை பிரயோகிக்கப்பட முடியுமா அல்லது அல்லவா என்பது. **(60 புள்ளிகள்)**

(ஆ) வெள்ளவத்தயில் அமையப்பெற்றுள்ள அடுக்குமாடி குடியிருப்பிற்கு ஏற்புடைய சட்டம் என்ன? **(40 புள்ளிகள்)**

உமது விடையை பொருத்தமான நியதிச்சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்ட ஆதாரங்களைக் கொண்டு ஆதாரப்படுத்துக.

05. **அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக.

கீழே தரப்பட்டுள்ள சட்ட நிகழ்வுகள் தொடர்பில் நியாயாதிக்கத்தைக் கொண்ட நீதிமன்றம்/ நியாயசபையை இனங்காண்க. உமது விடையானது பொருத்தமான நியதிச்சட்டத்தைக் கொண்டு ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.

(i) ஹென்றி என்பவன் அண்மையில் தொழிலாளர் சங்கத்தினால் ஏற்பாடு செய்த தொழிற்சங்க நடவடிக்கையில் பங்கேற்க அனுமதிக்காத, அரச நிறுவனமான, தனது தொழில்தருனருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய விரும்புகிறான்.

(ii) ஷோயா என்பவள் தனது ஏற்றுமதி வணிகத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்ற வர்த்தக குறியீடானது (trade mark) அதே தொழில்துறையை சார்ந்த பிறிதொரு வியாபாரத்தினால் பயன்படுத்தப்படுவதனைக் கண்டு கொண்டதோடு அவளது புலமைச் சொத்துரிமைகள் மீறலுக்கெதிராக வழக்குத்தாக்கல் செய்ய அவள் விரும்புகிறாள்.

(iii) கீதா என்பவள் தனது கணவன் சுனில் என்பவனுக்கு எதிராக விவாகரத்து வழக்கொன்றை தாக்கல் செய்ய விரும்புவதோடு தனது இரண்டு பிள்ளைகளின் பாதுகாவல் (custody) மற்றும் பராமரிப்பு ஆகிய இரண்டையும் கோருகிறாள்.

(iv) சிக்மா பிரைவேட் லிமிட்றெட் என்பது தனியார் ஏற்றுமதி கம்பனியொன்றாகும். அண்மையில் அந்த கம்பனி தனது 20 வேலையாட்களின் சேவையை எவ்வித காரணமும் தெரிவிக்காது முடிவுறுத்தியது. சேவை முடிவுறுத்தப்பட்ட வேலையாட்கள் கம்பனியின் அந்த செயலை கேள்விக்குட்படுத்த விரும்புகின்றனர்.

(v) லைலா என்பவள் சமன் என்பவனது கவனக்குறைவான வாகன செலுத்துதல் காரணமாக அவளது மோட்டார் வண்டிக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு நிவாரணம் கோர விரும்புகிறாள்.

**(20x5= 100 புள்ளிகள்)**

06. (அ) மற்றும் (ஆ) ஆகிய **இரண்டிற்கும்** விடை தருக.

(அ). டோனி மற்றும் பெப்பர் எனும் உரோமன் கத்தோலிக்கர்கள் கிறிஸ்தவ சடங்குகளின் படி திருமணம் செய்து கொண்டனர். அவர்களது திருமணம் இலங்கையில் திருமணம் தொடர்பான பொதுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது. திருமணமான உடனேயே தம்பதியினர் பொருளாதார கஷ்டங்களை அனுபவித்ததோடு அடிக்கடி சண்டையிட்டனர். டோனி விவாகரத்தை விரும்பிய போதும் பெப்பர் அது அவளது மத நம்பிக்கைகளுக்கு எதிரானது என்பதால் அதனை மறுத்தாள். அனேக வருடங்களின் பின் டோனி பஸ்னா என்பவளை சந்தித்ததுடன் அவளை காதலித்தான். டோனியின் நிலைமை மற்றும் அவனது திருமணம் தொடர்பிலான பிரச்சினைகள் பற்றி பஸ்னா அனுதாபம் கொண்டாள். டோனி பின் இஸ்லாமிற்கு மதம் மாறியதோடு தனது முதலாவது திருமணத்தை முடிவுறுத்தாது பஸ்னா உடன் இரண்டாவது திருமணத்தை செய்தான். பெப்பர் டோனிக்கு எதிராக பொலீஸில் முறைபாடொன்றைச் செய்தாள். டோனி தனது இரண்டாவது திருமணம் முஸ்லிம் ஆள்சார் சட்டத்தின் கீழ் சட்டரீதியானது என கோருகிறான்.

டோனிக்கு ஆலோசனை வழங்குக. உமது விடையை பொருத்தமான தீர்ப்புச் சட்டம் மற்றும் நியதிச்சட்ட ஏற்பாடுகளைக் கொண்டு ஆதாரப்படுத்துக.

(ஆ). அப்துல்லா மற்றும் சாரா ஆகியோர் 2014 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டதோடு அவர்களுக்கு சைன் எனும் ஒரு மகன் இருந்தான். உடனடுத்து, அப்துல்லா மற்றும் சாரா அவர்களது மத நம்பிக்கை மற்றும் வழக்கங்களுக்கு அமைய ஹமீட் இனை மகவேற்பு செய்தனர். அப்துல்லா சாராவின் முன்னைய உறவின் மூலம் பிறந்த முத்தாலிப் என்பவனை தனது சொந்த மகனைப் போல் ஏற்று பராமரித்தான். அப்துல்லா மற்றும் சாரா ஆகியோர் தமது பிள்ளைகளை சமமாக விரும்பி நடாத்தியதோடு அவர்கள் தமது சொத்துக்களில் சமமான பங்குகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என விரும்பினர். துரதிஷ்டவசமாக. அப்துல்லா இறுதி விருப்பாவணம் இல்லாது திடீரென இறந்தான்.

முஸ்லிம் சட்டத்தின் இறுதிவிருப்பாவணம் இல்லாத வழியுரிமையின் கீழ் சைன், ஹமீட் மற்றும் முத்தாலிப் ஆகியோரது அடுத்துறல் உரிமைகள் தொடர்பில் ஆராய்க. உமது விடையை பொருத்தமான தீர்ப்புச்சட்டம் மற்றும் நியதிச்சட்ட ஏற்பாடுகள் என்பவற்றைக் கொண்டு ஆதாரப்படுத்துக.

**(50X2 =100 புள்ளிகள்)**

***********